Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், சார்வரி பங்குனி 28 ஆம் நாள் ஷவ்வால் 23. (10-4-61) திங்கட்கிழமை இதழ் 50

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 / 303 / 3003 பத்திகளை உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

பெங்களூர்-2.

Advt. 83

# பேச்சுவார்த்தைக்கு

## இனி ஒரு நிபந்தனை

## டாக்டர் நாகநாதன் வெளியிட்ட விபரம்

### காலஞ்சென்ற பிரதமர் இருந்திருந்தால் கோரிக்கைகளை ஏற்றிருப்பார்

வாழைச்சேனை, ஞாயிறு

இனிமேல் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு டாக்டர் நாகநாதன் ஒரு நிபந்தனையைத் தெரிவித்துள்ளார். இராணுவம், வாபஸ் பெறப்பட வேண்டும்; யாழ்ப்பாணத்தில் பங்கீட்டடரிசி வழங்கப்பட வேண்டும். இதன்பின்பே பேச்சுவார்த்தை நடத்த நாம் ஒப்புக் கொள்வோம் என்று அவர் அறிவித்துள்ளார்.

"திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா இன்று உயிருடனிருந்தால் எங்கள் கோரிக்கைகளை ஏற்று நிறைவேற்றி வைப்பார்" என்று டாக்டர் இ. எம். வி. நாகநாதன் தெரிவித்தார்.

நீதி மந்திரியுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட பின் மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்த டாக்டர் நாகநாதன் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

சத்தியாக்கிரக இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்

(6-ம் பக்கம் பார்க்க)

## மாணவனின் பரிதாப மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

சிவியாதெரு, கலைமகள் லேனில் வசிக்கும் செல்வன் பொன்னையா மனோராஜா என்ற 17 வயது மாணவன் நாயைக் குளிப்பாட்டச் சென்று ஆனையிறவு ஆற்றில் சிக்குண்டு மரணமடைந்தான்.

உறவினர் ஒருவருடன் நாயை ஆனையிறவு ஆற்றில் குளிப்பாட்டிக் கொண்டிருந்த சமயம், அவன் சேற்றில் புதையுண்டு உயிர்துறந்தான் என அறிவிக்கப்படுகின்றது. இச்சிறுவனைக் காப்பாற்றும் முயற்சி தோல்வியுற்றது.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம், "விபத்தின் காரணமாக மரணமானான்" என்று தீர்ப்பளித்தார்.



"தமிழுக்காக எதையும் தாங்கும் இதயம கொண்டோம்" என்று பொறித்த கொடிகளுடன், வவனியாவில் வீரப்பெண்மணிகள் சத்தியாக்கிரகம் செய்ய கச்சேரிக்குச் செல்லுகின்றார்கள்.

## 'கடைசி முயற்சிதான் நேரடி நடவடிக்கை'

—உடுப்பிட்டி எம். பி.

## 'உரிமைகளை மறுப்பது நாட்டைப் பிரிப்பதாகும்'

—பருத்தித்துறை எம். பி.

யாழ்ப்பாணம், ஞாயிறு

அமைச்சர்கள் யாழ்ப்பாணம் வந்தபோது எதிர்ப்புக்காட்டாது விட்டதும் மனச்சாட்சிக்கு விரோதமான விஷயங்கள் சிலவற்றில் அரசாங்கத்துக்கு ஆதரவாக நடந்து கொண்டதும் சமாதான முறையில் பிரச்னைகளைத் தீர்க்க முயற்சிக்க இராஜதந்திரமான நடவடிக்கைகளாகும். இவற்றுலெல்லாம் பயன்கிடைக்காமற் போகவே பொதுஜன இயக்கத்தால் உரிமை பெறலாமென்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். இது விஷயத்தில் தமிழ் மக்கள் காட்டும் ஒற்றுமையை உலகில் எங்குமே காண முடியாது.

இவ்வாறு கடந்த சனிக்கிழமை இரவு நல்லூர் செங்குந்தர் சந்தை திறந்தவெளி மைதானத்தில் தமிழ் இனப் பாதுகாப்பு இயக்கத்தின் கூட்டமொன்றில் பேசும்போது உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் குறிப்பிட்டார். டாக்டர் கே. இராமசாமி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

கட்டுப்பாடான ஓர் தலைமையில் வாலிபர்களும் பங்குபற்றி இங்குவந்தது எங்களுக்குக் கிடைத்த முதல் வெற்றி. இளைஞர்கள் பங்குபற்றாத எந்த இயக்கமும் உலகில் வெற்றி பெறாது. உரிமைகளைப் பெறுவதற்காக நாம் பார்லிமெண்டில் கடந்த காலத்தில் நடந்து

(6-ம் பக்கம் பார்க்க)

## பங்கீட்டரிசி விநியோகத்தில் அரசாங்கத்தின் அலட்சியம்

### கூட்டுறவு சமாஜ மகாநாட்டில் கண்டனம்

யாழ்ப்பாணம், திங்கள்

"பங்கீட்டரிசி விநியோகிக்கப்படாததற்கு சமஷ்டிக்கட்சி மீது அரசாங்கம் குற்றஞ்சாட்டுவது பலவீனமானது" என யாழ்ப்பாண மாவட்ட பலநோக்குக்கூட்டுறவுச்சங்க யூனியன் காரியதரிசி திரு. ராஜசேகரன் நேற்று முன்தினம் நடைபெற்ற யூனியன் மகாநாட்டில் கூறினர்.

"அத்தியாவசிய உணவுப் பொருள்களை விநியோகிக்க போதிய சாதனமற்ற காரியாலயங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. மறியல் நடைபெறும் இடங்களுக்கப்பால் வசதியான இடத்தில் பொதுமக்களுக்கும் கூட்டுறவு யூனியன்களுக்கும் அத்தியாவசிய உணவுப்பொருள்களை விநியோகிக்க அரசாங்கத்தின் உத்தரவின்பேரில் தற்காலிக அரசாங்க அதிபர் மறுத்துவிட்டது உண்மை.

இவ்விதக் காரியாலயங்கள் நிறுவப்பட்டிருக்குமாயின் தேவையான அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் அதில் கடமையாற்ற வசதி இருந்திருக்கும். அத்தியாவசிய சேவைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை அரசாங்க அதிபரும் அசராங்கமும் அலட்சியப்படுத்தியுள்ளது கண்டிக்கத்தக்கது. அவர்கள் எல்லா மக்களையும் எப்போதும்

(6-ம் பக்கம் பாக்க)

## தோட்டத்தில் ரூ. 54,700 களவு!

பெட்டிகலை, ஞாயிறு

கெத்தண்டல தோட்டத்தைச் சேர்ந்த 800 தொழிலாளர்களுக்கான சம்பளப்பணம் தோட்டக் காரியாலயத்திலுள்ள இரும்புப் பெட்டியிலிருந்து களவாடப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

54,700 ரூபாயும் களவாடப்பட்டுவிட்டதால் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை.

---

புதுடில்லி, ஏப்ரல் 9

3-ம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கதர், கிராமத்தொழில் அபிவிருத்திக்கு 89 கோடி ரூபாய் ஒதுக்கபபட்டிருக்கிறது.

## சட்ட மறுப்பு இன்று இல்லை

யாழ்ப்பாணம், திங்கள்

பலரும் எதிர்பார்த்தது போல் இன்று யாழ்ப்பாணத்தில் மறியல் இயக்கம் விஸ்தரிக்கப்பட மாட்டாதென்றும் சட்டமறுப்பு நடவடிக்கையும் இன்று மேற்கொள்ளப்படமாட்டாதென்றும் தெரிய வருகிறது.

பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்காக கொழும்புக்குச் சென்றிருந்த தலைவர் செல்வநாயகம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்குத் திரும்பி வருவாரென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் திரு. செல்வநாயகம் இன்றுதான் யாழ்ப்பாணம் வந்து சேரவிருக்கிறார்.

இன்று நடைபெறவிருக்கும் தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் கொழும்பில் நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தைகள் சம்

(6-ம் பக்கம் பார்க்க)

## 'தமிழர் பிரச்சினை தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது சீக்கிரம் தீர்வுகாணுவிடில் தீர்க்கமுடியாத பிரச்சினையாகிவிடும்'

— திரு பெரேரா எம். பி.

யாழ்ப்பாணம், ஞாயிறு

"தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெறும் சத்தியாக்கிரகம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை என்பதில் சந்தேகமில்லை. சீக்கிரம் இதற்குத் தீர்வு காணப்படாவிடின், நாளடைவில் அது தீர்க்கமுடியாத ஒரு பிரச்னையாக ஆகிவிடும்" என ஜா-எல எம். பி. திரு. பாரிஸ் பெரேரா (ஐக்கிய தேசியக்கட்சி) பத்திரிகைக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

தனிப்பட்ட முறையில் விடுமுறையைக் கழிக்கவந்திருக்கும் திரு. பெரேரா, நேற்று கச்சேரிக்குச் சென்று சத்தியாக்கிரக நிலைமையை நேரில் பார்வையிட்டார். அவருடன் திரு. எம் பாலசுந்தரம் எம். பி., திரு. ஏ. அமிர்தலிங்கம் எம்.பி., வி. என் நவரத்னம் எம். பி., வி. தர்மலிங்கம் எம். பி., கே. துரைரத்னம் எம். பி, செனட்டர் ஜி. நல்லையா ஆகியோர் கச்சேரிக்குச் சென்று சத்தியாக்கிரக

(6ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

"அழகு வேண்டாம்; அன்பு வேண்டும். பணம் வேண்டாம்; பண்பு வேண்டும்."


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு பங்குனி மீ 28 உ (10-4-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.


## இலங்கை ஆஸ்பத்திரிகள்

இலங்கையிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகள் இன்று எவ்வளவு மோசமாகவுள்ளதென்பதைப்பற்றி, சுகாதார அதிபர் டாக்டர் கருணரத்னவே, பகிரங்கமாக ஒப்புக்கொள்ளுகின்றார். நூற்றுக்கு 55 விகிதமுள்ள ஆஸ்பத்திரிகளில் மின்சார வசதியோ, தண்ணீர் வசதியோ இல்லையாம். மண்ணெண்ணெய் கைவிளக்குகளையும், வாளிகளையும் வைத்துக்கொண்டு திண்டாடுவதையும் இதற்கு ஐந்துவருடத் திட்டமொன்றைத் தயாரித்துள்ளதாகவும், இதைப் பூர்த்திசெய்வதன்மூலம், பல ஆஸ்பத்திரிகளிலும் நோயாளருக்கு அதிக வசதி கிடைக்கலாமென்றும் தெரிவிக்கிறார். இந்தத் திட்டம் எப்போது தயாராகி, ஒப்புக்கொள்ளப்பட்டு, அமுலுக்கு வருமோ ஆண்டவனுக்கே வெளிச்சம்!

மொத்தமுள்ள 450 ஆஸ்பத்திரிகளில் தினசரி 35 ஆயிரம் படுக்கை நோயாளரும் 80 ஆயிரம் மற்ற நோயாளரும் சிகிச்சை பெறுகிறார்கள். இதில் பெரும்பாலோரும் ஏழைகளே. செல்வந்தர்கள், பணம் கொடுத்து "நர்ஸிங் ஹோம்"களுக்குச்சென்று சிகிச்சைபெறக்கூடும். ஏழைகள் விஷயத்தில் அலட்சியமாக இராமல், அவசியமான வசதிகளை அவர்களுக்கு செய்து கொடுப்பதை முதல்வேலையாக அரசாங்கம் கொள்ளவேண்டும்.

பணமில்லை என்ற பல்லவியை அரசாங்கம் பாடக்கூடும். ஆனல் ஆஸ்பத்திரி அதிர்ஷ்டச்சீட்டு நிதியில் பல லட்ச ரூபாய்கள் சேர்ந்துள்ளன. அப்பணத்தைக்கொண்டு, இந்த அத்தியாவசிய வசதிகளை நோயாளருக்குச் செய்து கொடுக்கலாம். புதிதாக மற்றோர் வைத்தியக் கல்லூரியைக் கட்ட இந்த நிதியை உபயோகிக்கலாமென்று ஒரு செய்தி வெளியாயிற்று. வைத்தியக் கல்லூரி கட்ட, லாட்டரி நிதியை உபயோகிப்பது முறையாகாது. அதற்கு அரசாங்கமே பணம் ஒதுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இருக்கும் ஆஸ்பத்திரிகளை சரிவர நடத்துவதற்கு ஒழுங்கு செய்வதே அரசாங்கத்தின் முதல் கடமை.

ஆஸ்பத்திரிகளில் வசதிகள் குறைவாக இருப்பது ஒருபுறமிருக்க, அங்குள்ள சிப்பந்திகளில் சிலர், நோயாளரை மரியாதையின்றி, அலட்சியமாக நடத்துவதாக, பல புகார்கள் கிடைக்கின்றன. நோயாளரிடம் டாக்டர்களும், ஆஸ்பத்திரிச் சிப்பந்திகளும் விசேஷ அன்பு காட்டி கவனிக்கவேண்டும். ஏதோ 'கூலிக்கு மாரடிப்பதுபோல் நினைத்துக்கொண்டு, சேவை செய்பவர்களுக்கு ஆஸ்பத்திரியில் இடமிருக்கப்படாது. பெரிய அதிகாரிகளும், டாக்டர்களும் இதற்கு முன்மாதிரியாக இருந்து, மற்ற சிப்பந்திகளுக்கு அடிக்கடி அறிவுறுத்தவேண்டும். அன்பே. மருந்தைவிட நோய்களை வெகுவாகத் தீர்க்கக்கூடும். ஆகவே நோயாளருடன் அன்பாகப் பேசி, நடத்துவதால், மற்ற வசதிக்குறைகளையும் அவர்கள் மறந்து, குணமடையக்கூடும். அன்பாக நடந்துகொள்ள காசு பணம் செலவில்லை. சேவை உள்ளமும் அதிக பொறுமையும் வேண்டும். இப்பேர்ப்பட்ட அதிகாரிகளும் சிப்பந்களும் உள்ள ஆஸ்பத்திரிகளில் மற்ற வசதிகள் குறைவாக இருப்பினும், நோயாளர் அவற்றைப் பொருட்படுத்தாமல், நிம்மதியாக இருந்து, சீக்கிரம் குணமடையலாம். ஆஸ்பத்திரி ஊழியர்கள் மேலான சமூகசேவை செய்பவர்களென்பதை மறக்கப்படாது.

# அரசியல் பேச்சுகள் முறிந்தன

## இனி என்ன? சட்டமறுப்பா? சமரசமா?

[நமது அரசியல் நிருபர்]

சத்தியாக்கிரகம் நடக்கையில் தமிழரசக் கட்சித் தலைவர்களுடன் எவ்வித பேச்சும் நடத்தமுடியாதென்று பிரதமர் சிறிமா அறிவித்திருந்தார். சத்தியாக்கிரகம் தொடர்ந்து நடந்துகொண்டுதானிருக்கிறது. அப்படியிருந்தும், நீதி மந்திரி சாம். பி. ஸி. பர்ணண்டோ, தமிழரசுக்கட்சித் தலைவர்களுடன் பேச்சுகள் நடத்தினர். பிரதமர் பேசினலென்ன, நீதிமந்திரி பேசினலென்ன? இரண்டும் ஒன்றுதானே.

இதைப்பற்றி பார்லிமெண்டில் பிலிப் குணவர்த்தனவும், கே. எம். பி. ரசஜரத்னவும் கேள்விகள் எழுப்பினர். முதல்நாளன்று சபைமுதல்வர் ஸி. பி. டி' சில்வா, பேச்சுகள் நடப்பது தமக்குத் தெரியாதென்றார். மறுநாள், பேச்சுகள் நடந்ததை ஒப்புக்கொண்டார். தமிழரசுக்கட்சித் தலைவர்கள் விரும்பியதாலேயே பேச்சுகள் நடந்ததாகக் கூறினர். மூன்றும் நாள் அவர் வெளியிட்ட அறிக்கையில், "பல சிங்கள, தமிழ்ப் பிரமுகர்கள் கேட்டுக்கொண்டதின் மீது" பேச்சுகள் நடந்ததாகச் சொன்னர். இது எப்படியாயினும், சத்தியாக்கிரம் நடக்கையிலேயே இந்த அரசாங்கம், தன் பிடிவாதத்தைத் தளர்த்தி பேச்சுகள் நடத்த முன்வந்ததைப் பார்க்கிறோம். அந்த மட்டில் பணிந்து வர நேரிட்டது வரவேற்கத்தக்கதுடன், ஏதாவது ஒரு சமரசம் செய்து, இப்போதைய நெருக்கடியைத் தீர்க்க வேண்டுமென்பதில் அரசாங்கத்துக்கும் ஆவல் உள்ளதென்பதற்கு இது அடையாளமாகும்.

ஃ ஃ ஃ

அதேபோல், அரசாங்க மொழி இலாகாவுக்கான பொறுப்பை வகிக்கும் நீதிமந்திரி பேசச் சம்மதித்துள்ளதை அறிந்ததும், தமிழரசுக் கட்சித்தலைவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து கொழும்புக்குப் பறந்துசென்று, நீதிமந்தியுடன் திருச்செல்வத்தாரின் வீட்டில்பேச்சுகள் நடத்தினர். இதிலிருந்து சமாதானத்தில் அவர்களுக்குள்ள ஆர்வத்தைக்காணலாம். பிரதமருடன்தான் பேசுவோமென்றும் மந்திரியுடன் பேசமுடியாதென்றும் அவர்களும் பிடிவாதம் செய்யவில்லை.

மேலும் பார்லிமெண்ட் 3 மாத 'ரஜா' கொடுத்திருந்தும் அதற்குள்ளாகவே பார்லிமெண்ட் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். "இவர்கள் ஏன் பார்லிமெண்ட்சபைக்கு வந்திருக்கிறார்கள்?" என்று வெலிமடை எம்.பி.கேட்டதற்கு, "பார்லிமெண்ட் சபையில் கலந்துகொள்ள அவர்களுக்கு உரிமை உண்டு" என்று மண்டையிலடித்தார், சபைமுதல்வர்.

ஃ ஃ ஃ

ஆனல் "தமிழரசுக் கட்சியினர் கேட்ட 5 கோரிக்கைகளும் அரசாங்க மொழிச்சட்டத்துக்கும் தமிழ் விசேஷ உபயோகச் சட்டத்துக்கும் முரண்பட்டதால் அவற்றை ஒப்புக்கொள்ள அரசாங்கத்தால் முடியவில்லை" என்று திரு. ஸி. பி. டி' சில்வா அரசாங்கத்தின் சார்பாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார்.

அந்த ஐந்து கோரிக்கைகளும்,பண்டா - செல்வா ஒப்பந்தத்தைத் தழுவியனவே. என்றாலும் இவற்றையும் இந்த அரசாங்கம் ஏற்க மறுத்துவிட்டது. அந்த ஒப்பந்தம் பண்டாவால் கிழித்தெறியப்பட்டதை இதன் மூலம் அவர் மனைவியும் ஊர்ஜிதம் செய்துவிட்டதாகின்றது.

பண்டா-செல்வா ஒப்பந்தம் பற்றித் தமிழரிடையிலும் கருத்து வேற்றுமை யுண்டு. அதை மலைநாட்டுத் தமிழ்த்தலைவர்கள் ஒப்பவில்லை.சமஷ்டிக்கொள்கை பற்றியும் அபிப்பிராயபேதம் உண்டு.

இப்போது நடக்கும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில், தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரமும், வவனியா சுயேச்சை எம். பி. யான திரு. டி. சிவசிதம்பரமும், ஈடுபட்டுள்ளனர். உடுப்பிட்டி மெம்பர், சத்தியாக்கிரக செயல் கமிட்டியிலும் அங்கம் வகிக்கிறார். இதிலிருந்து, இந்த இயக்கம் ஒரு அரசியல் கட்சி மட்டும் நடத்துவதல்லவென்பது தெளிவு. மேலும் எந்த அரசியல் கட்சியிலும் சேராத பொது மக்களில் பலரும், தமிழ் மொழி உரிமைக்காக இதில் ஈடுபட்டிருக்கின்றார்கள். மற்ற அரசியல் விஷயங்களில் கருத்து வேற்றுமை இருப்பினும், தமிழுக்கு சட்டபூர்வமான உரிமை வேண்டுமென்பதில் கருத்து வேற்றுமை கிடையாது.

பண்டா - செல்வா ஒப்பந்தம் பற்றிச் சிங்களவரிடையிலும் அதிக வேற்றுமையுண்டு. யு. என். பி. கட்சி இதற்கு நேர்மாறு. தமிழுக்கு நாடெங்கும் தேசிய மொழி அந்தஸ்து அளிக்கத் தயாராகவுள்ள யு. என். பி., சமஷ்டிக் கொள்கையை எதிர்க்கின்றது. ஜாயலையைச் சேர்ந்த யு. என். பி. கட்சி எம். பி. பாரிஸ் பெரேரா, யாழ்ப்பாணத்தில் நடக்கும் சத்தியாக்கிரகத்தைப் பார்த்துவிட்டு, இது தேசியப் பிரச்சினை என்றும், இதை உடனடியாகத் தீர்க்காவிடில் நிலைமை மிக மோசமாகுமென்றும் கூறினர்.

கொழும்பில் நடந்த பேச்சுக்கள் பயனளிக்காவிடினும், மொழி விஷயமாக ஒரு சமரசம் ஏற்படுமென்ற நம்பிக்கை தெரிவிக்கப்படுகின்றது. இது எப்படிக் கைகூடுமென்பது தெரியவில்லை. தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. இன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் திரும்புகிறார். அவர் வந்ததும்தான் சட்டமறுப்புத் தீவிரமாகுமா? அல்லது சமரசத்துக்குப் புதிய வழி ஏதும் உண்டா? என்பது தெரியும்.

இவ்விஷயத்தில் அரசாங்கக் கட்சிக்கு மட்டுமன்றி, யு. என். பி. முதலிய மற்றக் கட்சிகளுக்கும் பொறுப்புண்டாகையால், அவர்கள் கைகட்டிக் கொண்டு சும்மா இருக்க முடியாது. இது அரசியல் பிரச்சினை. அரசியல் நிர்ணய சபை மூலமே தீர வேண்டும். இன்றுள்ள அரசியல் திட்டத்தைத் தயாரித்த சேர் ஐவர் ஜெனிங்ஸே தாம் பெரிய தவறு செய்துவிட்டதாகவும், சிறுபான்மைச் சமூகங்களுக்குத் தக்க பாதுகாப்பளிக்க இலங்கை அரசியல் சட்டம் தவறிவிட்டதென்றும் பொருள்பட, பி. பி. ஸி.யில் பேசியுள்ளார். இங்கு அரசியலைத் திருத்தியமைத்தாலே இப்பெருந் தவறு நீங்க முடியும்.

## தமிழ் மொழியை பாதுகாக்க

### விசேட ஆராதனைகள்

மாவிட்டபுரம், ஏப். 9

தமிழ் மொழி ஒரு தேவபாஷையானதினல் அதனை அழிக்க எதனலும் முடியாது! இந்தக் கஷ்டமான நிலையில் நாமெல்லோரும்ஒருமுகப்பட்டு போராடி அன்னையின் கண்ணீரைத் துடைத்து அவள் இன்னலைப்போக்குவது எமது கடனாகும். இல்லையெனில் நாமெல்லோரும் நன்றிகெட்டவர்களாகவும் அன்னைக்குத் துரோகம் செய்தவர்களாகவும் ஆகிவிடுவோம்'' என்று கந்தசாமி கோவிலில் நடைபெற்ற, தமிழ்மொழிப் பாதுகாப்பு பிரார்த்தனைச்சபையின் வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் குறிப்பிட்டார்.

தமிழ் மொழிப் போராட்டம் வெற்றிபெற வேண்டும் எனக் கோரி விசேஷ பூசையும் ஆராதனைகளும் நடைபெற்றன.

## நாட்டின் நலனுக்காக ஜபம்

கொழும்பு, ஏப். 9

தமிழ்-சிங்கள புதுவருடத் தினமான ஏப். 13ம் திகதி இலங்கை திருச்சபை நாட்டின் நலனுக்காக விசேஷ பிரார்த்தனைகள் நடத்தும்.

அன்றைய தினம் விசேஷ பிரார்த்தனைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கொழும்பு பிஷப் வண. ஆர்க்கிபால்ட் ரொல்லோ கிரஹாம் பெல் தமது திருச்சபையாளரைக் கேட்டிருக்கிறார்.

## ஐயாறன் எழுதுவது

வருகிற வியாழக்கிழமையன்று பிறக்கும் புதுவருட தினத்தை துக்க நாளாகக் கொண்டாடுவதா? அல்லது வழமைபோல் புனித நாளாகக் கொண்டாடுவதா? என்பது பற்றி கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளது.

துக்க நாளாகக் கொண்டாட வேண்டுமென்று கூறப்பட்ட ஒரு யோசனையை சைவப்பெண் ஒருவர் பலமாக எதிர்க்கிறார்.

இந்துக்களுக்கு இந்தப் புதுவருடம் ஒரு புண்ணிய காலம். புதுவருடதினத்தைதுக்கமாகக் கொண்டாடினல், பிறக்கும் வருஷமனைத்தும் துக்கமாகவேயிருக்குமென்றும், அன்று புனிதமாக மகிழ்ச்சியுடன் கொண்டாடினல், வருடமனைத்தும் புனிதமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்குமென்றும் ஒரு நம்பிக்கை.

* * *

"அன்று பகல் 12-46 நிமிடம் முதல் இரவு 8-46 வரை புண்ணியகாலமாகும். அக்காலத்தில் மருத்து நீர் தேய்த்து ஸ்நானம் செய்து, மஞ்சள் நிறப்பட்டாயினும்,மஞ்சள்கரை போட்ட வெள்ளைப் புதுவஸ்திரமாயினும் தரித்து, நித்திய கர்மானுஷ்டானம் முடித்து, விக்கினேசுவரர் முதலிய குலதேவாலய தரிசனங்கள்செய்து, சூரியனுக்குப் பொங்கல் பூஜை நமஸ்காரங்கள் செய்து. இயன்றளவு தானதிகள் வழங்கி, பெரியோர்களை நமஸ்கரித்து, அவர்களால் ஆசீர்வதிக்கப்பெற்று இஷ்டகுலபந்துக்களுடன் இருந்து, பாலன்னம், தேன் முதலியவற்றுடனே அறுசுவைப் பதார்த்தங்களைப் போஜனம் செய்து, கண்ணடி, தீபம் முதலிய மங்கலப் பொருட்களைத் தரிசித்து, சுகந்த சந்தண புஷ்பாதிகளை அணிந்து, தாம்பூலம் அருந்தி, புதுப் பஞ்சாகப் பலன்களைக் கேட்டு, மங்களகரமாக வாழக்கடவர்".

இவ்வாறு புதுவருடத்தில செய்யவேண்டிய காரியம்பற்றி புதிய திருக்கணித பஞ்சாங்கம் தெரிவிக்கின்றது. இவையெல்லாம் புனிதகாரியங்களே.

* * *

மகாத்மா காந்தியுடன், தொண்டர்கள் உப்பு சத்தியாக்கிரகத்துக்குப் புறப்படுகையில், பெண்மணிகள் அவர்களுக்கு நெற்றியில் சந்தன குங்குமப் பொட்டிட்டு, ஆசி கூறி மங்களமாக வழியனுப்பி வைத்தனர். துக்கம் கொண்டாட கறுப்புத்துணியோ,கொடியோ காட்டவில்லை. வீரப்போர் நடத்தி, தியாக வேள்வியில் குதிக்கையில் தெய்வ பக்தியும் உறுதியான நெஞ்சும் வேண்டுமேயன்றி துக்க உணர்ச்சியன்று.

இம்முறை பட்கீட்டு அரிசி கிடைக்காமல், இங்கு வறிய குடும்பங்கள் பலவும் கஷ்டப்படுவதால், புதுவருடத்தன்று எல்லாக் கோவில்களிலும் மக்களுக்கு அன்னதானங்களைச் செய்ய, ஒழுங்கு செய்வது மிகவும் நல்லதாகும்.

* * *

கச்சேரியடியில் தினசரி சத்தியாக்கிரகத்தில் சேர்ந்து பஜனைப் பாட்டுக்கள் பாடும் ஒரு வீரப் பெண்மணியை, அங்கு சமய வேறுபாடுகள் எதுவும் உண்டா? என்று கேட்டேன். சைவ, கிறிஸ்தவ பாடல்கள் பல பாடப்படுவதாயும், பலரும் எல்லாப் பாடல்களையும் சேர்ந்து பாடுவதாயும், வேற்றுமை எண்ணங்கள் தாமறிந்து எதுவுமில்லை என்றும் எல்லா சமயங்களையும் போற்றும் சில பொதுப்பாடல்களையும் தாம் பாடுவதாயும், தம்மைப் பின்பற்றி பலரும் பாடுவதாயும் அவர் தெரிவித்தார்.

ஆண்டவன் ஒருவனே. எல்லாருக்கும் பொதுவான அந்தக் கருணை வள்ளலைத் துதித்துப் பிரார்த்தனை செய்கையில், வேற்றுமைகளுக்கு ஏது இடம்? மகாத்மா எல்லா மதங்களையும் இணைக்கும் கூட்டுப் பிரார்த்தனையை நடத்தி சமய ஒற்றுமைக்கு மேலான வழி காட்டினர், சமயபேத எண்ணங்கள் மறையவும் நம்மிடையே ஒற்றுமை வளரவும் தவச்சாலையாக மாறியுள்ள கச்சேரியடி வழி காட்டுவதாகவுள்ளதல்லவா?

* * *

யாழ்ப்பாண அரசாங்க அதிபர், கச்சேரிக்குப் பின்புறமுள்ள வாசஸ்தலத்தை விட்டு காங்கேசன் துறையிலுள்ள சிமிந்தி தொழிற்சாலை விருந்தினர் விடுதியில் குடும்பத்துடன் வசித்து வருவதாகத் தெரிகிறத.

கச்சேரிமுன் இராப்பகலாக நடைபெறும் சத்தியாக்கிரக தவஜுவாலை சூழ் நிலையில் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்?

அவரை நேரில் கண்ட ஒரு தமிழன்பருக்கு, அவர் தேநீர் கொடுத்து உபசரித்ததுடன், தமது கையெழுத்தை தமிழில் "நிச்சிங்க விஜயரத்ன" என்றும் எழுதிக் கொடுத்தாராம். தமது தனிப்பட்ட நல்லெண்ணத்தைத் தெரிவிக்க நல்ல அறிகுறி இது. ஆனல் அரசாங்கத்தின் மனம் சற்றும் மாறியதாகத் தெரியவில்லையே!

(சென்ற சனிக்கிழமை 'ஐயாறனில்'. 'பெரிய புள்ளியாம்' என்றிருந்தது. 'பெரிய புண்ணியம்' என்றிருக்கவேண்டும்.)

## இடமாற்ற உத்தரவு ரத்து

யாழ்ப்பாணம், சனி

தமிழ் அரசாங்க ஊழியர் சங்கத்தின் தலைவரும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பல் சிகிச்சைப் பகுதிப் பொறுப்பாளருமான டாக்டர் எம். சரவணபாலசூரியரின் இடமாற்ற உத்தரவு ரத்துச் செய்யப்பட்டுள்ளது. டாக்டர் சரவணபாலசூரியர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தந்திமூலம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை அரசாங்க ஊழியர் ஆட்சேபித்திருந்தனர்.

## விதானைமாருக்கு சம்பளம்

யாழ்ப்பாணம், சனி

கிராம விதானைமார், காரியாதிகாரி கந்தோர்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், பிஸ்கால் இலாகா உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு இந்து புதுவருட தினத்துக்கு முன்னர் சம்பளம் கொடுக்கப்படும்.

யாழ்ப்பாணம் கச்சேரி ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கு எவ்வித ஒழுங்கும் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

# பின்தங்கிய நாடுகளுக்கு

## பொருளாதார உதவி

### மாக்மில்லன்-கெனடி உடன்பாடு

வாஷிங்டன் ஏப் 9

உலக பாதுகாப்புக்கும், சமாதானத்துக்குள்ள சாதனமாக விளங்கும், ஐ. நா. ஸ்தாபனத்தை சீர்குலைக்க முயற்சிக்கும் எந்த நடவடிக்கையையும் தாங்கள் எதிர்ப்பதாக அமெரிக்க ஜனாதிபதி கெனடியும், பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலனும் அறிவித்துள்ளார்கள்.

வாஷிங்டனில் அதிபர் கெனடியும், மாக்மில்லனும் உலக விவகாரங்கள் குறித்து கலந்தாலோசித்த பின்னர் விடுத்த அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு கூறியுள்ளனர்.

சோவியத் யூனியனுடன் திருப்தியான உறவுகள் வைத்துக்கொள்வதுபற்றி தமக்கிடையில் உடன்பாடு ஏற்பட்டதாக அவர்கள் அறிவித்துள்ளனர். ஜெனிவாவில் நடைபெறும் அணு ஆயுத குறைப்பு பற்றிபேச்சுகள் வெற்றியளிக்க வேண்டுமென்று தாங்கள் கருதுவதாகவும், உலக சுதந்திரத்துக்காகப் பாடுபடும் தமது லட்சியத்தை உறுதி செய்து கொண்டதாகவும், அவர்கள் தெரிவித்துள்ளனர். பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளுக்கு பெருமளவு உதவிகள் வழங்குவது பற்றியும் அவர்களுக்குள் கருத்து ஒற்றுமை நிலவியதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## இலங்கைக்கு இந்திய கைத்தறித் துணி

சென்னை, ஏப். 6

இலங்கைக்கு முன்போலக் கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்ய சென்னை அரசாங்கம் முயற்சித்து வருகின்றது.

## சலவை, சலூன் தொழிலாளர் ஆதரவு

அட்டன், எப். 5

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெற்றுவரும் சத்தியாக்கிரகத்துக்கு ஆதரவும ஊக்கமும் கொடுக்குமுகமாக இலங்கை சலவை, சலூன் தொழிலாளர் சங்கத்தின் ஒருகே ஷ்டி திரு. என். சிங்காரம் தலைமையில் இம்மாதம் 17 ம் திகதி யாழ்ப்பாணம் செல்லத் தீர்மானித்திருக்கின்றது.

புதுவருடம் முதல் சலவை, சலூன் தொழிலாளர்களின் மனைவி மக்களையும் அங்கத்தவர்களாகச் சேர்த்துக்கொள்வதென்றும் குடும்பம் ஒன்றுக்கு வருடம் 25 ரூபாய் செலுத்த வேண்டும் என்றும் எதிர்வரும் ஜூன்மாதம் பதுளையில் நடைபெறப் போகும் 72 வது மகாநாட்டில் மட்டக்களப்பு எம். பி. இராசதுரை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த திரு. ராஜலிங்கம், இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த சண்முகதாசன் ஆகியோரை பிரதம பேச்சாளர்களாக அழைக்க வேண்டுமென்றும் முடிவுசெய்திருக்கிறது.

## ராஜாஜியின் பென்ஷனுக்கு வரி!

சென்னை, ஏப். 6

ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி வருடமொன்றுக்கு ரூபாய் 11,000 பென்ஷன் எடுப்பதால் இதற்கு வரி விதிக்க வேண்டுமென்று சென்னை கார்ப்பரேஷன் முடிவு செய்திருக்கிறது.

## மாங்குளத்தில் ஹர்த்தால்

வவனியா, வெள்ளி

மாங்குளம், ஒலுமடு ஆகிய இடங்களில் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது வவனியாவில் மறியல் இயக்கம் ஆரம்பமாகி இன்றுடன் 17-வது தினம் முடிவடைகிறது.

மாங்குளம், ஒலுமடு, கருப்பட்டைமுறிப்பு ஆகிய இடங்களிலிருந்து ஆயிரத்துக்குமேற்பட்ட ஆண்களும் பெண்களும் வவனியாக் கச்சேரிக்கு வந்து மறியலில் கலந்துகொண்டனர். மாங்குளம், ஒலுமடு ஆகிய கிராமச் சங்க அங்கத்தவர்களின் தலைமையில் ஊர்வலமாக வந்த தொண்டர்கள் வவனியா எம். பி திரு. தா. சிவசிதம்பரத்திடம் பணமுடிப்பும் வழங்கினர்.

சிங்கள வர்த்தகர்களும் தங்கள் கடைகளை அடைத்து ஆதரவு தெரிவித்ததுடன் மறியல் இயக்கத்திலும் கலந்து கொண்டனர்.

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மகாநாடு

விஜயவாடா, ஏப். 9

விஜயவாடாவில் நடைபெறும் கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டில், இரு தலைவர்கள் சமர்ப்பித்த திட்டங்கள்பற்றி நேற்று விவாதம் நடந்தது. ஆனால் முடிவுறவில்லை.

இடதுசாரிக்கட்சிகளிடையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவது சம்பந்தமான திட்டங்களை அவ்விரு கம்யூனிஸ்ட் தலைவர்களும் சமர்ப்பித்துள்ளனர். இரண்டு திட்டங்களும் சில அம்சங்களைத்தவிர ஒரே நோக்கத்தைக் கொண்டனவாக விருப்பதாகத் தெரிகிறது.

# மொழி உரிமைகளைப்பெற இ. தொ. கா நடவடிக்கை

## சமரச முயற்சி முறிந்தால் மேற்கொள்ளப்படுமாம்

கொழும்பு, ஏப். 9

தமிழ் மக்களின் மொழி உரிமையைப் பெறுவதற்காக இ. தொ காங்கிரஸ் தன் சொந்த ரீதியில் ஒரு போராட்டம் நடத்துவதற்கு முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது தமிழ்த் தலைவர்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் நடைபெறும் சமரச பேச்சுவார்த்தைகள் முறிந்துபோகும்பட்சத்தில்தான் தொழிலாளர் காங்கிரஸ் தனிப்பட்ட முறையில் போராட்டத்தில் இறங்கும் என்று தெரிகிறது.

தற்போதைய நெருக்கடியில் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான எல்லா வழிகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்றும், கூடுமான வரை சமாதான முறையிலேயே சமரசம் ஏற்பட முயற்சிக்கவேண்டுமென்றும், சமரச முயற்சிகள் அனைத்தும் தோல்வியடையும் பட்சத்திலேயே காங்கிரஸ் நடவடிக்கையில் இறங்கவேண்டுமென்றும் கருதப்படுவதாகத் தெரிகிறது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த பிரமுகர் பின்வருமாறு கருத்து வெளியிட்டிருக்கிறார்:-

"காங்கிரஸ் நேரடி நடவடிக்கையொன்றில் இறங்குமானால் தற்போதைய நிலையில் நாட்டின் பொருளாதாரம் மேலும் வெகுவாக மோசமடையும். தோட்டத் தொழிலாளர் ஏதாவது நடவடிக்கையில் இறங்கினல் அதன் பிரதி பலன் எதுவாய் இருக்குமென்பது எங்களுக்குத் தெரியும். அதனால்தான் நிலைமையை மிக உன்னிப்பாகக் கவனித்துவருகிறோம். சமரசத்துக்கான எல்லா முயற்சிகளும் முறிந்துவிட்டதாக நாங்கள் கருதும் பட்சத்தில், மொழி உரிமைக்காகவும், பிரஜாவுரிமைக்காகவும் எங்கள் சொந்த முறையில் நடவடிக்கையில் இறங்குவோம்.

மொழிப் பிரச்சினை இப்பொழுது முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. சரியாகவோ பிழையாகவோ சமஷ்டிக்கட்சி சத்தியாக்கிரக இயக்கமொன்றை ஆரம்பித்திருக்கிறது. நீதிமன்ற மொழி மசோதாவின் மூலம் தமிழர்களை இந்த நடவடிக்கையில் இறங்க அரசாங்கம்தான் தூண்டிவிட்டிருக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம். தமிழ்ப் பேசும் மக்களின் உணர்ச்சியை நசுக்கவோ, அடக்கி ஆளவோ அரசாங்கத்துக்கு முடியாது. நாங்கள் நீதியைத்தான் எதிர்பார்க்கிறோம். இதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போராட்டமொன்றில் இறங்குமானல், எங்களுக்கு அப்போராட்டத்தைத் தவிர எங்கள் உரிமையைப் பெறுவதற்கு வேறு வழியில்லையென்பதே பொருளாகும்.

பாரிஸ், ஏப்ரல் 7

பொலிஸ் விரனைக் கொலை செய்த குற்றத்திற்காக, பாரிஸ் பொலிசார், 200 அல்ஜீரியர்களை கைது செய்துள்ளார்கள்.

தேசியவாதி தலைவரை முன்று பட்டிரவாதிகள் கொலை செய்ய முயன்றதாகவும் தெரியவருகிறது.


போன்: 585 தந்தி: மன்சூரு

நங்கையர் விரும்பும் அழகிய சிறந்த

நகைகள், வைரங்களுக்கு



சிறந்த ஸ்தாபனம்

கே. என். எம்.

மீருன் சாஹிப்

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்



ஹாண்ட்லூம்ஸ்

ஸ்தாபனத்தின்

7வது ஆண்டுவிழா

சித்திரை மாதம் 3ம் திகதி தொடக்கம்

12ம் திகதி வரை

எங்கள் கொண்டாட்டத்தை வாடிக்கைக்காரர்களுடன் பங்கு பற்றுமுகமாக, குறிப்பிட்ட நாட்களுக்குள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு பொருளுக்கும் 5ந்து வீத கழிவு கொடுக்க முன்வந்துள்ளோம்.

அனேக அதி உன்னத ரகங்களிலுள்ள சேலைகள், உடுப்பு ஜவுளிகள், திரைச்சீலைகள், கம்பளங்கள், படுக்கை விரிப்புகள், வேர்ட்டிங் துணிகள், சாரங்கள் ஆகியவை முதலிய, விரும்பியதை, தெரிந்தெடுங்கள்.

குறிப்பு: வாடிக்கைக்காரரின் வசதியை முன்னிட்டு இஸ்தாபனம் ஏப்ரல் மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை திறந்திருக்கும்.

ஹாண்ட்லூம்ஸ்

(இந்திய அரசாங்கம்)

7, செட்டித் தெரு, கொழும்பு.

கிளை. "அன்னை மாளிகை" பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தர வாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

**வைத்தியர் பரிபூரணானந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி,
Advt. 91 யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்கு விடப்படும்

யாழ்ப்பாணம், 71, இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்த இல்லம் உடனடியாக வாடகைக்கு உண்டு. கார் கராச், குளிக்கும் காம்பரா, நல்ல தண்ணீர் கிணறு முதலிய வசதிகள் உண்டு. விசாரிக்கவும்: ஞாயிற்றுக் கிழமைகளில் அல்லது த. வேலழகன், மேற்கு வீதி, ஊர்காவற்றுறை கடித மூலம் அறிந்து கொள்ளலாம். Advt 100

## கொக்குவில் இந்துக் கல்லூரியில் கற்கும் மாணவர்களின் பெற்றருக்கு அறிவித்தல்

கொக்குவில் இந்துக் கல்லூரிப் பெற்றர் ஆசிரியர் சங்கம் நிறுவும்நோக்கமாக கொக்குவில் இந்துக் கல்லூரியில் இப்பொழுது கற்கும் மாணவரின் பெற்றரினதும் இக் கல்லூரி ஆசிரியரினதும் கூட்டமொன்று 17 - 4 - 61 திங்கட்கிழமை பிற்பகல் நாலு (4) மணிக்கு கல்லூரிப் புதுக் கட்டிடத்தில் கூடும். இக் கூட்டத்துக்கு சமுகமளிக்குமாறு எமது கல்லூரியில் இப்பொழுது கற்கும் மாணவரின் பெற்ருர் அனைவரையும் வேண்டுகிறேன்.

இக்கல்லூரி நலன் பாதுகாப்புச் சபைக்குப் பெற்ருருக்குள் ஆறு பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்தல் இக் கூட்டத்தின் பிரதான உறுப்பாக அமையும்.

அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி,
6-4-61. Advt 102


## களியாட்ட விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 9

யாழ்ப்பாண மாநகரசபையால் நடத்தப்படவிருந்த யாழ் விநோத களியாட்டு விழா மறியல் இயக்கம் காரணமாக மே மாதம் 26ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஆசிரியருக்கு கடிதங்கள்

# கோவிலில் அன்னதானம்: தீண்டாமை ஒழிப்பு: அரசியலில் ஆணவம் நிலைக்காது:

ஈழத்தின் தமிழ்ப் பகுதிகளிலே - குறிப்பாக யாழ்ப்பாணத்திலே - இந்துக் கோவில்களின் திருவிழாக்கள் தொடங்கிவிட்டன. ஏராளமான பொருட்செலவில் போட்டித் திருவிழாக்கள் ஆண்டுதோறும் நடைபெறுவது வழக்கம். தமிழர்கள் உரிமைக்காக அறப்போர் நடத்தும் இவ் வேளையில் திருவிழாக்களில் ஆடம்பரங்களும் வீண் செலவுகளும் குறைக்கப்பட வேண்டும்.

மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோவிலில் சென்ற திங்கட்கிழமை நடந்தவிழாவில் வழமையான ஆடம்பரங்கள் குறைக்கப்பட்டதும், அன்னதானம் வழங்கப்பட்டதும் போற்றற்குரியதாகும். திருவிழாச் செய்யும் மற்றேரும் இம்முன் மாதிரியைப் பின்பற்றுவார்களென நம்புகிறேன்.

மு. சிவானந்தம்

## தீண்டாமை ஒழிப்பு

இன்றைய சூழ்நிலையில் முற்றாய் முழுதாய் தமிழுக்கு - தமிழ் குலத்துக்குத் தொண்டு செய்யும் பத்திரிகை ஒன்று ஈழநாட்டில் உண்டு என்றால் அது ஈழநாடு, பத்திரிகையையே குறிக்கும்.

யாழ் நகரில் உதித்து எங்கும் உலவிவரும் இந்தச் சிறந்த தினசரியில் தற்காலத்தில் வெளிவரும் எண்ணக் குவியல்களும், கருத்துக் கொத்துகளும், புத்தம் புதிய புதினங்களும் என்னைப் போன்ற ஏராளமான வாசகர்களால் நயக்கப்பட்டு, உவக்கப்பட்டு, வியக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்த்தாயின் ஈடேற்றம் தீண்டாமை ஒழிப்பில்தான் தங்கியிருக்கிறது என்ற உயர்ந்த உண்மையை உணர்ந்து தீண்டாமை ஒழிப்புப் பற்றிப் பகிரங்கமாகவே பிரசாரஞ் செய்யவும் இறங்கியுள்ளது. இந்த நேரத்தில் மதிப்புக்குரிய "ஐயாறன்" அவர்களின் தனிப் பணியைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. சில காலமாய் அவரின் பேனா தீண்டாமையைப் பற்றிக் குறைந்தது இரண்டு மூன்று வரிகளாவது எழுத மறப்பதில்லை. 4. 4. 61-ல் வெளிவந்த அவரின் கருத்துக்குவியலை வாசித்தவர்கள் அன்னருக்குத் தமிழ்த்தாயின் மேல் உள்ள நன்மதிப்பும் உயிர்களிடத்தில் உள்ள அபார அன்பும் எவ்வளவு என்பதை உணரமுடியும்.

அன்பே உருவான தெய்வ சந்நிதியிலே, உயர்வு தாழ்வுக்கு இடமளிப்பது சரியா? நாம் சிலரைத் தாழ்வாக மதிப்பதால்நம் மைப் பிறர் தாழ்வாக ஒதுக்குகிறார்கள். எல்லாம் கர்மபலன்தானே என்று நயமாய் கண்டிக்கும்போது உருகா வச்சிர வைதிக உள்ளமும் உருகத்தான் செய்யும். மேலும் யாகஞ்செய்யும் குருக்கள்மாரும் தீண்டாமைத் தீமையைபபோக்க முன்வரவேண்டும் என்று அறைகூவி அழைத்த அந்த அன்பர் ஐயாறனின் தைரியத்தைப் பாராட்டாமல் இருக்கமுடியுமா!

இந்தச் சந்தர்ப்பத்தைப் பிரயோகித்து, தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் ஈடுபடும் அன்பர்களுக்கு உங்கள் பத்திரிகை வாயிலாக நானும் சில கருத்துக்களை கூற விழைகிறேன்.

1. உலகத்திலே முதன்முதலில் தீண்டாமை ஒழிப்பைத் தொடங்கியது காந்தி அடிகள். அன்னவரின் வழியில் சென்றுதான் தீண்டாமைப் போரும் நடத்தவேண்டும்.

2. பொதுமக்களின் மனதை மாற்றுவதற்கு இசை ஓர் சிறந்த கருவி. நாட்டில் பிரசாரத்தின் போது, நாமக்கல் கவிஞன், புரட்சிக்கவிஞன், தேவிபோன்றவர்களால் தீண்டாமை பற்றி இயற்றப்பட்ட நவீன பாடல்களும், "நாம் யார்க்கும் குடியல்லோம்" "சங்கநிதி பதுமநிதி" போன்ற தேவாரங்களும் பண் குழைத்துப் பாடுவதால் நன்மை பயக்கும்.

3. தொண்டர்களின் பிரசாரம் ஏட்டளவில் நிற்கப்படாது நாட்டில் படைமுறையில் காட்டப்படுதல்வேண்டும்.

ந. இராஜன்

## அரசியல் ஆணவம் நிலைக்காது

1815- கண்டியைக் கைப்பற்றி, கரையோர மாகாணங்களுடன் இணைத்து, இலங்கை முழுவதையும் ஒரே நாடாக்கினன் ஆங்கிலேயன். அதே ஆண்டில் மாவீரன் நெப்போலியன் வீழ்ச்சியுற்றான்! வெவ்வேறு மொழி பேசும் ஆலந்தும், பெல்ஜியமும் ஒரே நாடாக இணைக்கப்பட்டன. வல்லரசுகளின் வலிமைக்கு அடிமையாகி மக்கள் ஒருப்பட்டனர். ஆங்கிலேயர் பேச்சுக்கு முச்சின்றிச் சிங்களவரும தமிழரும் ஒற்றையாட்சியின் கீழ் வாழவில்லையா?

ஆலந்தின் கோதுமையும் பெல்ஜியத்தின் தொழில் வளமும் செயற்கையான ஒரு ஒற்றுமையை ஏற்படுத்தின. செயற்கை ஒற்றுமை எத்தனை ஆண்டுகளுக்குத்தான் நிலவும்? இணைக்கப்பட்ட இரு நாடுகட்கும் வில்லியம் மன்னனுன். டச்சு மொழி ஆட்சிமொழி ஆனது-பெல்ஜியம் எரிமலை ஆனது! "டச்சுமொழி தெரிந்தவருக்குத்தான் அரசாங்கத்தில் சலுகையா?" என ஆத்திரமடைந்தனர் பெல்ஜியர். அரசியலில், சமுகத்துறையில் இழைக்கப்பட்ட அக்கிரமங்கள் அவர்களை அனலாக்கியது.

தனி நாடு கேட்டுப்பிரிந்து விடலாம் எனத்துடித்தார்கள், பெல்ஜிய வாலிபர்கள்! தடுத்தார்கள் பெரியோர்கள். சிந்தித்தார்கள். ஒரே மத்திய அரசின் கீழ் பிரதேச சுயாட்சி வேண்டுமெனக் கிளர்ச்சி செய்தார்கள். அன்றும், இன்றும் அரசியலில் ஆணவம் தலைவிரித்தாடுவது சாதாரண நிகழ்ச்சிதானே! பிரதேச சுயாட்சியானது உடமையாவது என உறுதிமொழிகள் ஆட்சியாளர்கள். 1830- வரை பொறுத்திருந்த பெல்ஜியருக்குக் காலம் மறியாது. அறப்போரில்லை—ஆயுதப் போரில் இறங்கினர்கள்! வெற்றி கண்டார்கள். உரிமைக்காக உறுதியோடு நின்று உயிர்விடவும் தயாரானால் வெற்றி நிச்சயம் தானே?

தனி நாடான பெல்ஜியம் அழிந்துவிடவில்லை. பிளெமிஷ், வலூன் ஆகிய இரு மொழிகளும் ஆட்சி மொழியாகின. கண்ணடித் தொழில் வளர்ந்து பொருள் வளமிக்க நாடாக மாறியது!

அண்மையிலே — இந்தியாவின் ஒரு மூலையிலே நமக்கு மொரு தனியரசு வேண்டுமென நாகர்கள் கிளர்ச்சி செய்தார்கள்! அறப் போரின் வலிமையை அவர்கள் அறிந்திருக்கவில்லை. கொரில்லாப் போர் முறையைக் கையாண்டார்கள். திம்மையா தலைமையில் இராணுவம் விரைந்தது. உரிமை கோரும் மக்களை வெறும் இராணுவபலம் அடக்கிவிட முடியாது என்பதை நேரு உணர்ந்தார். நாகர்கள் உரிமை பெற்றனர்.

உரிமை கோரும் மக்களை ஆணவத்தினால் ஆட்சியாளர் அடக்க நினைப்பதும், ஈற்றிலே அவர்களே அடங்கிப் போவதும் வரலாற்றிலே சர்வ சாதாரண நிகழ்ச்சிகள். அதிகார போதையினால் ஆட்சியாளர் இவற்றை மறந்துபோவர். நினைவுபடுத்துவது நாட்டுக்கு நலன் பயப்பதாகும்!

—சிவா

## பறையடித்தல்

"பறையடித்தல்"பற்றி சென்ற 5-ந் திகதி "ஐயாறன்" அவர்கள் எழுதியிருந்ததைக் கண்டு துணுக்குற்றதோடு மிக வருத்தமடைந்தேன்.

பல நூற்றுண்டுகளாகத் தமிழ் மக்களிடையே தீண்டாமை என்னும் கொடிய வியாதி இருந்துவருகிறது. ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்தவர்களில் சிலர், சாவீடுகளில் பறையடிப்பதின் மூலம்தான் தீண்டாமை நிலவிவருகிறதென்று நாங்கள் கருதவில்லை. மனிதனை மனிதனை மதிக்கும் தன்மை உயர்சாதித் தமிழர் என்று சொல்லப்படுபவர்களிடையே அருகிவருவதன் காரணமாகவே எங்களுக்கு இழிவைத் தந்து கொண்டிருக்கின்ற பறைகளை உடைத்து அக்கினிக்கு இரையாக்கினேமேயன்றி, தீண்டாமை இதனேடு மங்கி மறைந்துவிடுமென்பதற்காக அல்ல.

பறையடிக்கின்ற ஓரிருவரால் எங்கள் சமூகம் இழுக்கான பெயரைச் சம்பாதித்திருக்கிறதென்பதை உணர்ந்து வருந்தியமையாலேயே நாங்கள் 'பறையடித்தல்' என்ற இழிவான கருமத்தை மேற்கொள்ளவில்லை.

பறை கொட்டுபவர்களை 'ஐயாறன்' கௌரவக்குறைவாகக் கருதவில்லை என்பதைத் தெளிவாகக் கூறியிருக்கின்றார்கள். ஆயினும் சாவீடுகளில் பறை கொட்டுபவர்கள் எவ்வாறு மதிக்கப்படுகிறார்கள் என்பதை சிறிது கவனிக்க வேண்டுகிறேன். மனிதாபிமான மற்ற முறையில் எங்களவர் நடத்தப்படுகின்றார்கள் என்பதனால் உண்டாகிய வெட்கம் காரணமாகவே நாங்கள் பறைகளை உடைத்தோம். ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அச்சமூகத் தொழிலைச் செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்துவது முறையல்ல என்று 'ஐயாறன்' குறிப்பிட்டதற்கு எங்கள் நன்றி.

இக்கடிதத்தைத் தங்கள் பத்திரிகையில் பிரசுரிப்பதின் மூலம் தமிழரில் ஒரு பகுதியினராகிய ஹரிஜனங்களுக்குத் தொண்டு செய்தவர்களாவீர்கள் என்பதையும் கூறவிரும்புகிறேன்.

நா. பரமசாமி,
கௌரவ செயலாளன்,
சிவியாதெரு சனசமூகநிலையம்,
யாழ்ப்பாணம்.

## பேர்லினில் பீலிக்ஸ்

பேர்லின் ஏப்ரல் 7

விரைவில் ஐக்கிய ஜெர்மனியின் ஐக்கிய தலைநகராய் பேர்லின் விளங்கும் எனத் தாம் நம்புவதாய் இங்கு விஜயம் செய்திருக்கும் இலங்கை நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா கூறினர். தமக்களிக்கப்பட்ட ஒரு வரவேற்பின்போது அவர் இவ்வாறு கூறினர்.


## தேவை

பத்திரிகைத் தொழிலில் பயிற்சிபெற ஆர்வமுள்ள மூன்று பி. ஏ. பட்டதாரிகள், அல்லது அதற்கு இணையான கல்வித் தராதரமுள்ளவர்கள் தேவை. தெரிவு செய்யப் பெற்றவருக்கு பயிற்சி காலத்தில் படிச் செலவும் அளிக்கப்பெறும். கீழ்க் கண்ட விலாசத்துக்கு ஏப்ரல் 30-ந் திகதிக்குள் நற்சாட்சிப் பத்திரங்களுடன் மனுச் செய்க:

№ 475

நிர்வாக ஆசிரியர்
'ஈழநாடு'
யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

'ஈழநாடு' தினசரி மலைநாட்டுப் பதிப்பு, கண்டி, மாத்தளை, ஹட்டன், நுவரெலியா, பதுளை முதலிய பகுதியிலுள்ள ஈழநாடு ஏஜண்டுகள் ஈழநாடு விற்பனை சம்பந்தமான சகல விபரங்களுக்கும் கீழ்க்கண்ட எமது பிரதம ஏஜண்டுக்கு எழுதவும்

ஜெகஜோதி அன் கோ,
14, திருக்கோணமலை வீதி,
கண்டி.

## ஏஜண்டுகள் தேவை

'ஈழநாடு' தினசரி மலைநாட்டுப் பதிப்புக்கு கீழ்க் கண்ட பகுதிகளில் முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

| | |
|---|---|
| தலவாக்கொல்லை | நோர்வுட் |
| அக்கரப்பத்தனை | பொகவந்தலாவ |
| டயகாமம் | ரம்படை |
| நானுஓயா | நோர்ட்டன்பிரிட்ஜ் |

விபரங்களுக்கு:

# ஜெகஜோதி அன் கோ.

14, திருக்கோணமலை வீதி,
கண்டி. Advt. 94

## தெய்வ வழிபாட்டிற்கும்

உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்

**33**
**303** ஊதுபத்திகளை
**3003**

உபயோகியுங்கள்.

யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.

தயாரிப்பவர்கள்:

எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்-2.

சோல் ஏஜண்டுகள்.

# ஜெகஜோதி அன் கோ.

குருநெகிய.

Advt85

# வடபகுதி ஆசிரியர்களின் சம்பள விஷயம்

## ஆசிரியர் சங்கத் தலைவர் வித்தியாபதியுடன் பேட்டி

யாழ்ப்பாணம், திங்கள்
'வடபகுதியில் உள்ள சகல ஆசிரியர்களும் ஏனைய ஊழியர்களைப்போலவே தமது கடமைகளைத் தினமும் கவனித்து வந்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் அவர்களது சென்ற மாதச் சம்பளம் இன்றுவரை கொடுக்கப்படாதிருப்பது மிகவும் கவலைக்கிடமானதாகும்' என்று அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. கு. வி. செல்லத்துரை யாழ்ப்பாணம் வித்தியாபதியை பேட்டி கண்டு கூறினார்.

எந்தக் காரணத்துக்காகச் சம்பளம் கொடுபடாமலிருக்கிறதென்பதை நாம் உணரமுடியாமலிருக்கிறது. யாழ்ப்பாண வித்தியாபகுதி கந்தோரில் உள்ள மற்றைய ஊழியரின் சம்பளத்தை எல்லாம் தலைமைக் காரியாலயத்திலிருந்து கொடுக்க முடியுமாயின் அதேபோல ஆசிரியர்களின் சம்பளத்தையும் ஏன் கொடுக்க ஒழுங்கு செய்ய முடியாது. இவ் விஷயத்தில் தாங்கள் என்ன செய்ய இருக்கிறீர்கள்" என்று திரு. செல்லத்துரை வித்தியாபதியிடம் கேட்டார்.

கடந்த இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு கொழும்பில் கல்விப்பகுதி சிரேஷ்ட உதவிக் காரியதரிசி டாக்டர் ஆனந்த குருகேயையும் மற்றும் அதிகாரிகளையும் ஆசிரியர்களின் சம்பள விஷயமாகப் பேட்டிகண்டுவிட்டு யாழ்ப்பாணம் திரும்பியபின், வடபகுதி வித்தியாபதியை கண்டு திரு. செல்லத்துரை பேசினார். வித்தியாபதி திரு. சோமசேகரம் பின்வருமாறு பதிலளித்தார்:-

எனது நிர்வாகப்பகுதியிலுள்ள சகல ஊழியருக்கும் சம்பளம் வழங்கும் விஷயமாக நான் மேலதிகாரிகளைக் கேட்டுள்ளேன். ஆசிரியர்களும் மற்றைய ஊழியர்களைப்போல் சென்ற மாதம் தமது வேலையை முறையாக செய்துள்ளார்கள் என்பதையும் அறிவேன். அவர்கள் சம்பள விஷயமாக தலைமைக் கந்தோரிலிருந்து சம்பள விபரம் எடுத்து வழங்க உதவி வேண்டுமானால் எமது கந்தோரிலிருந்தே அதனோடு சம்பந்தப்பட்ட சில ஊழியர்களை தலைமைக் கந்தோருக்கு அனுப்பவும் தயாராய் இருக்கிறேன் என்றும் அறிவித்துள்ளேன்.

இது விஷயமாக மேலதிகாரிகளின் பதிலை எதிர்பார்த்திருக்க வேண்டும்.

## பொதுமக்கள் அலுத்துப்போனார்கள்

### இரு அமைச்சுகளின் அறிக்கை

கொழும்பு, ஏப். 9
வடக்கு, கிழக்கு மாகாணங்கள் சத்தியாக்கிரக இயக்கத்தை வலுப்படுத்த சமஷ்டிக்கட்சி தீவிரமாக முயன்றபோதிலும், பொதுமக்களுக்கு அலுப்புத்தட்டிவிட்டது என்று நேற்று பாதுகாப்பு அமைச்சும் உள்நாட்டுஅமைச்சும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையொன்றில் கூறியுள்ளன.

சத்தியாக்கிரக இயக்கத்தைப் பலப்படுத்த சமஷ்டிக்கட்சி தன்னலான முயற்சிகள் எல்லாம் எடுத்துவருகிறது. அதன் அடுத்த நடவடிக்கை ரயில் நிலையங்களில் மறியல் செய்வது என்றும் தெரிய வந்திருக்கிறது. சத்தியாக்கிரகத்தை பலப்படுத்தும்படி சமஷ்டிக்கட்சி விடுத்த கோரிக்கை திருக்கோணமலையில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை" என்று இரு அமைச்சுகளும் தெரிவித்துள்ளன.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் மாமூலான அலுவல்கள் நடைபெறுகின்றன. கச்சேரிகளிலும் வேறு சில அரசாங்க அலுவலகங்களிலும் சத்தியாக்கிரகம் நடைபெற்றபோதிலும் விவசாயம் சம்பந்தமான கருமங்களும், நீதிமன்றங்கள், பஸ் போக்குவரத்து, ரயில்வே எல்லாம் செவ்வனே நடைபெறுகின்றன. ஆனால் அரசாங்க அதிபர்களால் செய்யப்படும் அலுவல்கள்தான் கணிசமாகக் குறைந்திருக்கிறது.

## வங்கி நெருக்கடி பற்றி விசாரணை செய்ய ஒரு அதிகாரி

கொழும்பு, ஏப். ஞாயிறு
வங்கி ஊழியர் வேலை நிறுத்தம் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடிபற்றி விசாரணை செய்து அதைத்தீர்ப்பதற்கான ஆலோசனை கூறுவதற்கென கைத்தொழில் தகராறு சட்டத்தின்கீழ் தொழில் உதவிக் கமிஷனர் திரு. அப்பாத்துரை நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

காங்கோவில்

## காயமடைந்த 8 பாரத வீரர்

### ஒருவர் மரணம்

வாஷிங்டன், ஏப். 9
காங்கோவிலுள்ள ஐ. நா. படைகள் வடக்கு காட்டாங்காவில் உள்நாட்டுப்போரைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றன.

பலுமா ஜாதியினரிடமிருந்து காட்டங்கா துருப்புகள் பற்றிக்கொண்ட ரயில் நிலையம் இப்பொழுது ஐ. நா. துருப்புகளிடமிருக்கிறது.

ஸ்டான்வில், லியப்போட்வில் தலைவர்களுக்கிடையில் நடைபெறவிருந்த பேச்சுவார்த்தைகள் பின்போடப்பட்டிருக்கிறது. சிலதினங்களுக்குமுன் சாலையொன்றில் காயமடைந்த 8 பாரத படைவீரர்களில் ஒருவர் ராணுவ ஆஸ்பத்திரியில் மரணமானார்.

## புதிய தந்திக்கம்பி தொழிற்சாலை

புதுடில்லி, ஏப்ரல் 7
தந்திக்கம்பிகளை உற்பத்தி செய்வதற்காக இன்னுமொரு தொழிற்சாலையை நிறுவவேண்டும், என்று லோகசபையில் டாக்டர் சுப்பிராயன் கேட்டிருக்கின்றார். தபால் விநியோகத்தை விரைவாகவும் நேர்த்தியாகவும் செய்யத் தகுந்த ஏற்பாடுகளை விரைவிலே ஆரம்பிக்க வேண்டுமென்றும் டாக்டர் சுப்பிராயன் கேட்டுள்ளார்.

## "மக்கள் எல்லாரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்"

### பௌத்த பிக்கு கருத்து

கொழும்பு, ஏப் 9
"இலங்கையின் எந்தப்பாகத்தில் வாழ்ந்தாலும் எல்லா மக்களும் ஒரே மனித குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்பதை உணர வேண்டும்' என்று கொழும்புப் பகுதியின் பிரதம பௌத்த பிக்கு வண. ஹீனட்டியான தம்மலோக்க தேரோ தெரிவித்துள்ளார். அவர் ஜெர்மனிக்குப்போவதையொட்டி இலங்கை மக்களுக்கு விடுத்த செய்தியொன்றில் மேற்கண்ட கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

தம்மலோக்கதேரோ ஜெர்மனியில் பௌத்தமதம் பிரசாரம் செய்வதற்காக 5 பிக்குகளைக் கொண்ட ஒரு கோஷ்டிக்கு தலைமை வகித்துச் செல்கிறார்.

## தமிழுக்காக உடுப்பிட்டி எம். பி. காவடி

உடுப்பிட்டி, ஏப்ரல் சனி
உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் நேற்று தமிழ் உரிமைக்காக அதிகாலை கரவெட்டி தச்சந்தோப்பு விநாயகர் ஆலயத்திலிருந்து செல்வச் சந்நிதிக்குத் திருக்காவடி எடுத்தார்.

நூற்றுக்கணக்கான சைவப் பெருமக்கள் "வெற்றி வேல் வீரவேல்" என்று முன் செல்ல திரு. சிவசிதம்பரம் தோளில் காவடியுடன் பின்சென்றார்.

ஊர்வலத்தில் சகல மதத்தைச் சேர்ந்த மக்களும் கலந்துகொண்டார்கள்.


ரசிகர்களை மகிழ்விக்க
திரும்பவும் காட்சியளிக்கிறது
கிங்ஸ்லி
(கொழும்பு)

இணைபிரியா இதயம் உள்ள சகோதரர்கள் நாங்கள். அதனால் அண்ணன் தங்கையாகிய நாங்கள் இந்த அவனிக்கே புதியவர்கள்.
ஏன் அகிலத்திற்கே புதுமையானவர்கள். நாங்கள் கண்ணியம், இலட்சியம், தன்னடக்கம், பண்பாடு போன்ற இன்னும் நல்ல வழிகளைக் கடைப்பிடித்தோம்.
........எனவே
பழகப்பழக பாலும் புளிக்கும், பருகப் பருக தேனும் திகட்டும். இனிக்கும் நிலவும் இதயத்தை மயக்கும். தென்றலும் கூட சில போது கசந்து விடுவதுஉண்டு........
ஆனால் மலை அசைந்தாலும் நிலை அசையாது, சுகம் நாடாது, சுதந்திரம் தேடாது வாழ்க்கையில் போராடினேன்......
ஏன்?
எல்லாம் என் தங்கையின் நல்வாழ்விற்காக. கடைசியில் கண்டதென்ன?
பிரமை தட்டும் புயல் வாழ்வில் சிக்கிய எங்கள் உள்ளமுருக்கும் வரலாற்றை வந்து பாருங்கள்......
புதுமை விரும்பிகள்

எம். ஜீ. ராமச்சந்திரன்
பி. வி. நரசிம்மபாரதி
பி. எஸ். கோவிந்தன்
ஈ. வி. சரோஜா
மாதுரிதேவி, வி. சுசீலா
நடித்த



அசோகா பிக்சர்ஸ்
என் தங்கை
டைரக்ஷன்: CH. நாராயணமூர்த்தி & M.K.R. நம்பியார்
கதை.வசனம்: வில்லன்: T.S. நடராஜன் ஸ்டுடியோ: நியூடோன்
-அசோகா பிக்சர்ஸ், 16. லை அவன்யூ, மதராஸ்.4

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
இப்பொழுது திரையிடப்படுகிறது!
எம். ஜி. ஆர். — பானுமதி நடித்த
அலிபாபாவும் 40 திருடர்களும்

மனோகரா (யாழ்ப்பாணம)
ஆனந்த் ★ ஹேமலதா ★ அசோகன்
நடித்த
விஜயபுரி வீரன்

## யாழ்ப்பாணம் மாநகரசபை

**கேள்விப்பத்திர அறிவித்தல்**

**பெரியகடை மரக்கறிச்சந்தையில், கிழக்கு வங்களாவிற்கும் மேற்கு வங்களாவிற்கும் இடையிலுள்ள கட்டிடத்திலிருக்கும் இல. 28, 97, 98 கொண்ட 3 முழுக்கடைகளையும், இல. 105, 106 கொண்ட 2 அரைக் கடைகளையும் வாடகைக்குக் கொடுப்பதற்கான**

### கேள்விப்பத்திரம்

மேற்கூறப்பட்ட இலக்கங்களைக் கொண்ட கடைகள், பெரியகடை மரக்கறிச் சந்தைக்குள் காலியாகவுள்ளன. இக்கடைகளை 1-5-61 ஆம் திகதி தொடக்கம் 31-12-63 ஆம் திகதி வரை வாடகைக்குக் கொடுப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் 1961 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20 ஆம் திகதி (20-4-61) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிவரை கேள்விப்பத்திரமொன்றுக்குப் பிணைப்பணமாக ரூபா 25/ம் பத்திரப்பணமாக ரூபா 2-50 ம் செலுத்தி இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு முழுக் கடையின் மாத வாடகை ரூபா 45/ ஆகவும் ஒரு அரைக்கடையின் மாத வாடகை ரூபா 22-50 ஆகவும் இந்த வருடத்துக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மிகுதியகாலத்துக்கு அவ்வப்போது சபை வருடாந்த வாடகையை நிர்ணயிக்கும்.

கேள்விக்காரர்கள் ஒவ்வொருவரும் இந்த வருடத்துக்கு அதாவது 1-5-61 ஆம் திகதிமுதல் 31-12-61 ஆம் திகதி வரையும் தாங்கள் கேட்கும் கடையில் இருந்து வியாபாரம் செய்யும் உரிமைக்கு, உரிமைப் பணமாக எவ்வளவு தொகை கொடுக்க விரும்புகிறார்கள் என்றும், 1962 ஆம் ஆண்டுக்கும் 1963 ஆம் ஆண்டுக்கும் தனித்தனியே எவ்வளவு உரிமைப்பணம் வருடா வருடம் கொடுக்க விரும்புகிறார்கள் என்பதையும் கேள்விப்பத்திரத்தில் தெளிவாகக் காட்ட வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளரினால் 1961 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20 ஆம் திகதி (20-4-61) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திரதாரர் 25-4-61 ஆம் திகதிக்குமுன் இந்த ஆண்டுக்குரிய உரிமைப்பணத்தையும் — மூன்று மாத வாடகைப் பணத்தையும் (முற்பணமாக) செலுத்துவதுடன் 31-12-63 ஆம் திகதியன்று தன்னால் நடாத்தப்பட்ட கடையைக் காலி செய்து சபைக்கு எவ்வித நஷ்டமும் விளைவிக்காமல் ஒப்படைப்பேன் என்று ஓர் உடன்படிக்கையும் எழுதி 1-5-61 ஆம் திகதி தொடக்கம் கடையை ஏற்றுக்கொள்ள வேண்டும். சபையினது உப விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் முரணான வகையில் கடை நடத்துபவர்கள் உடனடியாகக் கடைகளைக் காலி செய்ய வேண்டும். மேலும், சபை, ஒரு மாத முன்னறிவித்தலுடன் கடைகளை ஒப்படைக்கும்படி கோரும் சந்தர்ப்பங்களில் கடைகளை ஒப்படைக்க வேண்டும்.

1962 ஆம் ஆண்டுக்குக் கட்ட வேண்டிய உரிமைப் பணத்தை 31-12-61 ஆம் திகதிக்கு முன்னரும், 1963 ஆம் ஆண்டுக்குக் கட்ட வேண்டிய உரிமைப் பணத்தை 31-12-62 ஆம் திகதிக்கு முன்னரும் செலுத்த வேண்டும். குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்தைச் செலுத்தத் தவறினால் வாடகை திரும்பவும் விற்கப்படும். சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பொருட்களை மாத்திரம் தான் இக்கடைகளில் விற்பனை செய்யலாம்.

கேள்விப் பத்திரதாரர் இம்மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவராய் இருத்தல் வேண்டும். அவர்கள் விரும்பியபடி ஒவ்வொரு கடைகளுக்கும் அல்லது எல்லாக் கடைகளுக்கும் கேள்விப் பத்திரங்கள் அனுப்பலாம்.

மாநகரசபையினால் கொடுக்கப்பட்ட கடைகள் நடத்துபவர்களுக்கு கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது.

இதுசம்பந்தமாக மேலதிக விபரங்கள் அறிய விரும்புவோர் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரிடமிருந்து நேரிலோ அல்லது கடித மூலமோ அறிந்துகொள்ளலாம்.

ஆ. வ. சின்னையா,
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம் 7-4-61.

Advt. 99

---

வாஷிங்டன், ஏப்ரல் 8

அமெரிக்கா புதிய "டிஸ்கவரர்" செயற்கைக் கிரகம் ஒன்றை வானவெளிக்கு அனுப்பியுள்ளது. 4 தினத்தில் இதைத் திரும்பப் பெறுவதற்கான முயற்சிகள் செய்யப்படுமெனவும் அறிவிக்கப்பட்டது.

## கடைசி முயற்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட முறை தவறு என்று சிலர் கருதுகிறார்கள். பார்லிமெண்டில் விவாதித்தோ சமரசப் பேச்சுவார்த்தை மூலமோ முயற்சி கைகூடாவிட்டால் தான் போராட்டத்தில் நேரடியாகக்குதிக்கவேண்டுமென்பது அரசியல் உண்மை. இந்த உண்மைக்கமையவே கடந்த காலத்தில் நாம் நடந்துவந்திருக்கிறோம். இலங்கையில் சிங்கள மக்களுக்கு எவ்வித உரிமைகள் உண்டோ அவ்வளவு உரிமை தமிழினத்துக்குக் கிட்டும்வரை போராட்டம் ஓயாது.

பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் அடுத்துப் பேசும்போது குறிப்பிட்டதாவது:-

"இப்பொழுதுள்ள அரசாங்கம் செய்கிற அநியாயம் நாட்டைப் பிரிக்க முயல்கிறது. அது எங்கள் சக்தியையும் பெருக்கக் காரணம். இச்சக்திக்கு மதிப்புக் கொடாமல் அரசாங்கம் அடக்கி ஒடுக்க முயலுமானால் அது ஓர் தமிழ் ராச்சியத்திலேயே போய்முடியும். இந்தச் சமரசப் பேச்சுவார்த்தை முறிந்துபோனது எனக்குத் திருப்தி. ஏனெனில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் நீடித்திருக்கமுடியாது போகலாம்.

அடுத்து திரு. ஆ. துரைராஜசிங்கம் பேசுகையில் சிங்கள மொழிபோல் தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து அழிக்கும்வரை தமிழ் பேசும் இனத்தின் நல்லெண்ணத்தையும் ஆதரவையும் அரசாங்கம் ஒருபோதும் பெறமுடியாதென்றும் நாடு துண்டாடப்படுவதில் தாம் ஆச்சரியப்படவில்லையென்றும் இதற்குப் பொறுப்பாளிகள் தமிழ் மக்களின் அவநம்பிக்கையை உருவாக்கிய அரசாங்கந்தான் என்றும் கூறினார்.

கூட்டத்தில் மேயர் ரி. எஸ். துரைராசா, புதுமைலோலன் ஹாஜி எம். எம். அபுசாலி' செல்வி க. சரஸ்வதி, திரு' வி. என். நவரத்தினம் ஆகியோரும் பேசினர்.

## பங்கீட்டரிசி விநியோகத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எமாற்ற முடியாது" என்றும் அவர் கூறினார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகிக்க உரிய ஏற்பாடுகள் செய்ய அரசாங்கம் மறுப்பதைக் கண்டித்து மகாநாட்டில் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

## பேச்சுவார்த்தைக்கு இனி ஒரு நிபந்தனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் பொழுது பேச்சுவார்த்தை நடத்த முடியாமி என்று கூறிய அரசாங்கத்தினர் திரு. எம். திருச்செல்வம் மூலம் எங்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தனர். அழைப்பை ஏற்று நாங்களும் பேச்சுவார்த்தைக்குச் சென்றோம். பேச்சுவார்த்தை திரு. திருச்செல்வம் வீட்டில் நடைபெற்றது. நீதி மந்திரி (செனட்டர்) சாம் பி. ஸி. பெர்னன்டோ பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார்.

எங்கள் கோரிக்கைகளை நாங்கள் சமர்ப்பித்தோம். இக்கோரிக்கைகள் சிங்களம் மட்டும் சட்டத்துக்கு எதிராக இருப்பதாகவும் சிங்கள மொழியே நாட்டின் உத்தியோக பாஷையாக இருக்கிறதென்றும் இதனால் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாதென்றும் தெரிவித்தனர்.

### பிரதமர் செய்த ஒப்பந்தம்

காலஞ் சென்ற பிரதமர், சிங்களம் மட்டும் சட்டம் இயற்றப்பட்ட பின்பே எங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். சிங்களச் சட்டத்தைப் பாதிக்கக்கூடியதாக இருந்தால் அவர் எங்களுடன் ஒப்பந்தம் செய்திருக்கமாட்டார் என்று நாங்கள் கூறினோம்.

### விளக்கம் கொடுக்கவில்லை

அரசகரும மொழிச் சட்டத்தில், 'அரசகரும மொழிச் சட்டம் என்றால் என்ன?' என்பதற்கு விளக்கம் தரப்படவில்லை. இதுபற்றி நான் காலஞ் சென்ற பிரதமரிடம் கேட்டேன். அப்பொழுது அவர் பின்வருமாறு கூறினார்:-

"இந்த நாட்டில் தமிழும் தேசிய பாஷையாக இருக்கிறது. இந்நாடு முன்னேற்றமடைவதற்கு ஆங்கிலம் அவசியம். இன்றைய நிலையில் சிங்களம் பிற்போக்கான பாஷையாக இருப்பதனால் சிங்கள மொழிச் சட்டத்துக்கு விளக்கம் கொடுப்பதனால் நாட்டின் முன்னேற்றம் தடைப்படுவதோடு தமிழ் மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, வேண்டிய நேரத்தில் அதை நிவர்த்தி செய்ய முடியாது. எனவேதான் சிங்களம் மட்டும் சட்டத்துக்கு விளக்கம் கொடுத்து ஒரு இக்கட்டான நிலையைக் கொண்டுவர விரும்பவில்லை."

திரு. பண்டாரநாயக்கா இன்று உயிருடனிருந்தால் எங்கள் கோரிக்கைகள் நியாயமானவையென்பதை ஒப்புக்கொண்டு அதை நிறைவேற்றியும் வைப்பார்.

இனிமேலும் அரசாங்கம் எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்பினால் நாங்கள் பின்வரும் கோரிக்கைகளை முதலில் நிறைவேற்றும்படி கேட்டுக் கொள்வோம்.

1. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவத்தை வாபஸ் பெறவேண்டும்.

2. சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்பட்ட முதல் இரண்டு கிழமைகளில் யாழ்ப்பாணத்தில் பங்கீட்டரிசி விநியோகம் செய்தது போல் இனியும் கச்சேரிக்கு வெளியில் பங்கீட்டரிசி விநியோகத்துக்கான ஒழுங்குகளைச் செய்ய வேண்டும்.

3. சம்பளம் பெருமலுள்ள தமிழ்அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளமும் பென்ஷன், தருமப் பணம், க்ஷயரோக உதவிப் படி ஆகியவைகளும் வழங்கப் பட வேண்டும்.

இந்த மூன்று கோரிக்கைகளையும் நிறைவேற்ற அரசாங்கம் இணங்கினால்தான் இனிமேல் பேச்சுவார்த்தைக்கு நாங்கள் ஒப்புக் கொள்வோம்.

## சட்டமறுப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பந்தப்பட்ட சகல விஷயங்களும் முற்றாக ஆராயப்படவிருப்பதுடன் நேரடி நடவடிக்கையின் மூன்றாவது அம்சமான சட்டமறுப்பு இயக்கம் பற்றியும் ஆராய்ந்து முடிவு செய்யப்படுமெனத் தெரியவருகிறது.

கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் விபரத்தைத் தெரிவிக்கவும் அடுத்த நடவடிக்கைபற்றி விளக்கிக் கூறுவதற்குமாக யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை தலைவர் செல்வநாயகத்தின் தலைமையில் பொதுக் கூட்டமொன்று நடைபெறவிருப்பதாகத் தெரிகிறது.

சட்டமறுப்பு நடவடிக்கைகளின் முதலாவது அம்சம் அநேகமாக இவ்வாரத்துக்குள் ஆரம்பமாகலாமெனத தமிழரசுக் கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

## தமிழர் பிரச்சினை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களைச் சுற்றிக்காட்டினார்.

திரு. பெரேரா விடுத்த அறிக்கை பின்வருமாறு.-

"சத்தியாக்கிரக நிலைமையைப பார்வையிடச்சந்தர்ப்பம் கிடைத்ததுபற்றி மகிழ்ச்சியடைகிறேன். ஆண்களும், பெணகளும், இளைஞரும், வயோதிகரும், பணக்காரர்களும், ஏழைகளும் தங்கள் சுதந்திரத்திற்காக ஒன்றுபட்டு உணர்ச்சியுடன் போராட்டம் நடத்துவதுபற்றி நான் பாராட்டுகிறேன்.

ஒவ்வொரு பார்லிமெண்ட் அங்கத்தினரும், ஒவ்வொரு அரசியல்வாதியும், பிரதம மந்திரியும் நிலைமையை நேரில் காணவேண்டுமென நான் விரும்புகிறேன். தினசரி மகாநாட்டில் அதிகாரிகள் கூறும் அறிக்கையை விட்டுவிட்டு, நேரில் விஜயம் செய்து சத்தியாக்கிரக நிலையை நேரில் அவர்கள் பார்க்கவேண்டும். தேசிய முக்கியத்துவம்வாய்ந்த இப்பிரச்சினையைச் சீக்கிரம் தீர்க்காவிடில் காலம் கடந்தபின் தீர்க்கமுடியாத ஒன்றாக அது ஆகிவிடக்கூடும். சகல இனத்தவரிடையேயும், மதஸ்தர்களிடையேயும் சமாதானம் நிலவவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்".

திரு. செல்வநாயகத்தைப் பற்றி அவர் குறிப்பிடுகையில் அவர் வடமாகாணத்துக்குக் கிடைத்த உயர்ந்த, விசுவாசமான ராஜதந்திரி எனக் கூறினார். அவர் ஒரு பெரியார் என்பதில் சந்தேகமில்லை என்றும் காந்தியின் வரிசையில் கூட அவரை வைக்கமுடியும் என்றும் திரு. பெரேரா கூறினார். யூதர்களுக்கு விடுதலைவாங்கித் தந்த மோஸஸைப்போல் தமிழ் மக்களுக்குதிரு. செல்வநாயகம் விடுதலை வாங்கிக் கொடுக்கப் பாடுபட்டு வருகிறார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவசரகாலநிலையைப் பிரகடனம் செய்யும் நிலைமை அரசாங்கத்திற்கு ஏற்படவில்லை எனவும் அவர் கூறினார்.

## நிலப்பிரச்சினைபற்றி விநோபாஜி

புதுடில்லி, ஏப் 9

நேற்று ஆச்சாரிய விநோபாபாவே கொஹாட்டிக்குப் போனார். அங்கு காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் அவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

நாட்டின் நிலப்பிரச்சினையை அன்பையும், சமாதானத்தையும் அடிப்படையாகக்கொண்ட ஈகையினால்தான் தீர்க்க முடியும் என்று அவர் கூறினார்.


# மோனரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு
தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

மோனரு
அன்
ரோஸ்
பப்படங்கள்
மூவர்ண கலர்
லேபிளுடன்
மயில் – ரோஸ்
அடையாள மிட்டு

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

ஏ. எம். புகாரி அன் கோ

99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

Advt. 84


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.